**அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்ட கட்டம் I - 2023**

**-------------------------------------------------------------------------------------------**

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் I இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆந் திகதிய எஸ்எல்-பி 110 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்ட கடன் உடன்படிக்கை என்பவற்றின் பிரகாம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் அரச உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. அநுராதபுரம் வடக்குப் பகுதியில் பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்தல் அவற்றின் மூலம் அப்பகுதியில் சுத்திகரிப்பு நிலை மற்றும் சுகாதார நிலைமைக்கு பங்களிப்பு செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,515 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 6,817 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,726 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 5,166 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 பெப்ரவரியில் ஆரம்பித்திருந்ததுடன் 2018 பெப்ரவரி அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2025 யூலை 05 வரை நான்கு தடவை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள

## 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ரூபா.8,698.6 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் நிலையான சொத்து படிவங்கள் மூலம் சபையிடம் முறையாக ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், செயற்திட்ட நிதிக்கூற்றில் மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன்படி, வேலை முன்னேற்றத்தின் பெறுமதி ரூபா.8,698.6 மில்லியனால் கூட்டிக்காட்டிருந்ததுடன் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கணக்கு அதே அளவு குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | 8,698.61 | இதுவரை பெறப்பட்ட அனைத்து சொத்து படிவங்களும் பிராந்திய ஆதரவு மையத்திடம் (வட மத்திய) ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் பீஎம்யூ ஆல் சொத்து முகாமைத்துவ முறைமையில் (ஏஎம்எஸ்) உள்ளிடப்பட்டுள்ளன. தற்போது, அனுமதி மற்றும் மூலதனப் பணிகள் ஆர்எஸ்சீ ஆல் (என்சீ) மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | எல்கேஏஎஸ் 16 இன் படி செயற்திட்டக் கணக்குகளில் ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை மூலதனமாக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | லொட்-ஏ பிரதான ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய யூஎஸ்டி 169,906.76 வைத்திருத்தல் பணம் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 23 (அ) இன் 21 இற்கிணங்க ஆண்டு இறுதி உடனடி விகிதத்தைப் பயன்படுத்தி மறுமதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 6.19 | பொது பற்றுச்சீட்டு எண்.09 இலிருந்து திருத்தப்பட்டது. அதன் சரிசெய்தல் 2024 கணக்குகளில் இருந்து செய்யப்படுகிறது (இணைப்பு இலக்கம்.01) | வழுக்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் கணிசமான அளவு நிறைவடைந்த பின்னரும், செயற்திட்டத்தின் நீர் விநியோகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரும், ரூபா.58.15 மில்லியன் கடன் கிரயமானது, செயல்பாட்டில் உள்ள நடைமுறைக் கணக்கில் மூலதனமாக்கப்பட்டது. இலங்கை கணக்கீட்டு நியமம் எண். 23 (23) இன் படி, உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு வரும்போது, மூலதன கடன் வாங்கும் கிரயத்தை நிறுத்த சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | 58.15 | அதன் சரிசெய்தல் 2024 இல் மேற்கொள்ளப்படும். | வழுக்களைத் திருத்தி சரியான கணக்கீட்டு கணக்கீட்டு நடைமுறைகளை எதிர்காலத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா.17.52 மில்லியன் வட்டித் தொகை கொடுப்பனவு கணக்கிடப்படவில்லை. | 17.52 | பொது பற்றுச்சீட்டு எண்.10 இலிருந்து திருத்தப்பட்டது. அதன் சரிசெய்தல் 2024 கணக்குகளில் இருந்து செய்யப்படுகிறது (இணைப்பு இலக்கம்.02) | சரியான கணக்கீட்டு பதிவேடுகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | கடன் சேவைகள் கணக்கிற்கான பங்கு பங்களிப்பின் ஆரம்ப மீதியின் படி (நிதி நிலைமைக் கூற்றின் குறிப்பு எண். 13), ரூபா. 41 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 41 | குறிப்பு எண்.13 இலிருந்து திருத்தப்பட்டது. அதன் சரிசெய்தல் 2024 கணக்குகளில் இருந்து செய்யப்படுகிறது (இணைப்பு இலக்கம்.03) | வழுக்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | ஒப்பந்தக் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய ரூபா.122.78 மில்லியன் செயற்திட்டச் செலவுகள் பொறுப்பான அதிகாரியின் அனுமதியின்றி பொதுப் பதிவுகள் மூலம் மாற்றப்பட்டது. | 122.78 | தொடர்புடைய பொதுப் பற்றுச்சீட்டுக்களை பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (இணைப்பு இலக்கம்.04) | பணம் செலுத்தும் செயல்முறையின் உள்கட்டுப்பாடுகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீகச் செயன்முறை

### 3.1 பௌதீகச் செயன்முன்னேற்றம்

செயற்திட்டம் 2013 பெப்ரவரியில் அதன் செயற்பாடுகளைத் தொடங்கியதுடன் 05 ஆண்டுகளுக்குள் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. மீளாய்வாண்டில் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து பத்து வருடங்களும் பத்து மாதங்களும் நிறைவடைந்த போதிலும் செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 98.71 சதவீதமாகவும் 95.92 சதவீதமாகவும் காணப்பட்டன. எனினும், மீளாய்வாண்டில் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இச் செயற்திட்டமானது 0.15 சதவீதமான பௌதீக முன்னேற்றத்தை மாத்திரமே அடைந்துள்ளது. செயற்திட்டத்தின் ஒவ்வொரு செயற்பாட்டினதும் ஒட்டுமொத்த முன்னேற்றங்கள் பின்வருமாறுள்ளன

| இலக்கம். | நடவடிக்கை | எதிர்பார்க்கப்பட்ட இலக்கு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பட்ட இலக்கு | கணக்காய்வுச் சர்ச்சைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | இசின்வெசாகல வலயத்தில் பீவீசி குழாய்களிடல், டீஐ மற்றும் ஜீஐ குழாய்களைப் பொருத்தி மற்றும் வழங்குதல், பொருத்துக்கள் மற்றும் விசேடமளித்தல் (லொட் சீ -1) | 100 | 95 | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைதல் மேலும் தாமதிக்கப்படும் | எஞ்சியுள்ள ப்ளஷிங் மற்றும் கிருமி நீக்கம் செய்யும் பணிகளை மேற்கொள்வதற்காக லொட் ஏ மற்றும் லொட் பி முடிவடையும் வரை ஒப்பந்ததாரர் காத்திருக்க வேண்டும். | எதிர்பார்க்கப்படும் இலக்கை அடைவதற்கும் மீதிப் பணிகளை விரைந்து முடிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | ரன்வேவா, கிழக்கு ரன்வேவா மற்றும் எத்தகடா வலயத்தில் பீவீசி குழாய்களிடல், டீஐ மற்றும் ஜீஐ குழாய்களைப் பொருத்தி மற்றும் வழங்குதல், பொருத்துக்கள் மற்றும் விசேடமளித்தல் (லொட் சீ-3) | 100 | 96 | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைதல் மேலும் தாமதிக்கப்படும் | லொட் சீ3 ஒப்பந்ததாரர் யூலை 2019 இல் அனைத்து ஒதுக்கப்பட்ட பணிகளையும் முடித்தார். மீதமுள்ள ப்ளஷிங் மற்றும் கிருமிநாசினி பணிகளைச் செய்ய, லாட் ஏ மற்றும் லாட் பி முடிவடையும் வரை ஒப்பந்ததாரர் காத்திருக்க வேண்டியிருந்தது. | மீதமுள்ள லொட் ஏ மற்றும் லொட் பி இணைப்பு பணிகளை மேலும் தாமதமின்றி முடிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளீர்த்தல் வசதி நீர் சுத்திகரிப்பு பொறி, தரை சம்ப்கள், உயர்த்தப்பட்ட தொட்டிகள், அலுவலக கட்டிடங்கள், இயந்திர மற்றும் மின்சார பணிகள் (லொட் ஏ) ஆகியவற்றிற்கான பிரதான ஒப்பந்தம் 2018 மார்ச் 23 இல் வழங்கப்பட்டதுடன் இது ஆரம்பத்தில் 2020 ஏப்ரல் 20 அளவில் பூர்த்தியாக்குவதற்கு ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்டதுடன் குறித்த திகதியில் ஒப்பந்தத்தினை பூர்த்தியாக்காமையால் 2024 மார்ச் 31 வரையிலும் 07 தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், கொடுக்கப்பட்ட நீடிக்கப்பட்ட காலப்பகுதியில் ஒப்பந்தப் பொதியினை முழுமையாக பூர்த்தியாக்குவதற்கு ஒப்பந்தகாரர் தவறியிருந்தனர். மேலும், எஸ்சீஏடீஏ ரிமோட் தள இணைப்பு, நீர் சுத்திகரிப்பு பொறியில் படிகார தொட்டியின் லைனிங், ஏத்தகடா மற்றும் இசின்பெஸ்ஸகல கோபுர வளாகத்தின் நிலப்பதமிடல், விளக்கு பொருத்துதல்கள் நிறுவுதல், குளியலறை பொருத்துதல்கள், நிலப்பதமிடல் மற்றும் சர்க்யூட் பங்களாவில் ஏனைய முடித்த வேலைகள் 2024 யூலை 31 கணக்காய்வுத் திகதியிலும் முடிக்க வேண்டியுள்ளது. | கொவிட்-19 இன் தாக்கங்கள், இடைக்கால கொடுப்பனவு விண்ணப்பங்கள் (ஐபிஏக்கள்) செலுத்துவதில் தாமதம், நிதி நெருக்கடியால் ஏற்பட்ட பொருள் பற்றாக்குறை மற்றும் மஹாகனதராவ தொட்டியில் இருந்து தண்ணீர் எடுப்பது தொடர்பான சிக்கல்கள் காரணமாக லொட் ஏ இன் செயன்முன்னேற்றம் கணிசமாக தாமதமானது. இந்த சவால்கள் இருந்தபோதிலும், பீஎம்யூ வெற்றிகரமாக ஒப்பந்ததாரரை பகுதிவாரியாக வேலையைத் தொடருமாறு வலியுறுத்தியது, இதன் மூலம் தற்காலிக இடைநிறுத்தத்தைத் தவிர்த்தது, அதே நேரத்தில் நீர்ப்பாசனத் துறையுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. இந்த நெருக்கடியான காலகட்டத்தில் அடையப்பட்ட முன்னேற்றம் ஒரு நேர்மறையான விளைவைப் பிரதிபலிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். | மேலும் காலதாமதமின்றி, நாட்டிற்கு நஷ்டம் ஏற்படாமல், திட்டமிட்டபடி லொட் ஏ இன் ஒப்பந்தப் பொதியை நிறைவு செய்ய மாற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இசின்பெஸ்ஸகல வலயத்தில் (லாட் சி-1 ஒப்பந்தம்) 115 கிமீ நீளமுள்ள யுபிவிசி, டிஐ மற்றும் ஜிஐ குழாய்கள் மற்றும் ரபேவ, கிழக்கு ரபேவ மற்றும் எத்தகட வலயத்தில் (லாட் சி-3 ஒப்பந்தம்) 119.6 கிமீ நீளமுள்ள யுபிவிசி, டிஐ மற்றும் ஜிஐ குழாய்கள் அமைக்கும் விநியோக | லொட் சீ1 மற்றும் லொட் சீ3 ஒப்பந்ததாரர்கள் லொட் பி முடிக்கவேண்டிய நிலுவையிலிருப்பதால் தற்காலிகமாக தளத்திலிருந்து விலகினர். லொட் பி முடிந்ததும், ஒப்பந்ததாரர்கள் மீண்டும் | துப்புரவு மற்றும் கிருமிநாசினி பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் |

| | | | |
|---|---|---|---|
| | குழாய் ஒப்பந்தம் 2020 பெப்ரவரி 29 மற்றும் 2019 யூலை 15 இல் முறையே முடிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தங்களின் கீழ் குழாய் பதிக்கும் பணிகள் முடிவடைந்திருந்தாலும், லொட் பி ஒப்பந்தத்தின் கீழ் டிரான்ஸ்மிஷன் மெயின் மற்றும் விநியோக மெயின் முடிவடையும் வரை குழாய்களை சுத்தம் செய்தல் மற்றும் கிருமி நீக்கம் செய்யும் பணிகள் ஒப்பந்ததாரர்களால் நிறுத்தப்பட்டுள்ளன. ஆயினும்கூட, 21 எண்கள் லொட் பி - லொட் சி பைப்லைன் இணைப்புகள், கட்டப்பட்ட வரைபடங்கள், 9 கிமீ சுத்தப்படுத்தும் பணிகள் மற்றும் 26 கிமீ கிருமி நீக்கம் செய்யும் பணிகள், 8 சிபிஓ இணைப்புகள், 500 இல் 483 எண்கள் வீடு இணைப்புகள் முடிக்கப்படாமலும் லொட்-சீ1 ஒப்பந்தத்தின் கீழ் 102கிமீ சுத்தப்படுத்துதல் மற்றும் கிருமி நீக்கம் மற்றும் 45 எண்ணிக்கை லொட் பி - லொட் சி பைப்லைன் இணைப்புகள் லொட்-சீ3 ஒப்பந்தத்தின் கீழ் 2024 யூலை 31 இல் முடிக்கப்பட வேண்டும். | தளத்திற்கு அணிதிரட்டி மீதமுள்ள பணிகளைத் தொடங்கினர். சீபீஓ மற்றும் வீட்டு இணைப்புக்கான இணைப்பு முதலில் லொட் சீ ஒப்பந்தங்களின் எல்லையில் சேர்க்கப்படவில்லை. | பணிகளை முடிக்க ஒப்பந்ததாரர்கள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். |
| (இ) | 115,000 மக்களுக்கு பாதுகாப்பு நீரினை வழங்கும் நோக்கத்துடன் 2013 ஆம் ஆண்டில் செயற்திட்டம் தொடங்கப்பட்டது. இது பல் மற்றும் எலும்பு புளோரியஸ் போன்றவற்றை விளைவிக்கின்ற மற்றும் நாள்பட்ட கிட்னி நோய்களைப் பரப்புகின்ற அபாயகரமான காரணிகளில் ஒன்றானதுமான பாதுகாப்பற்ற மாசுபட்ட நிலத்தடி நீரில் தங்கியுள்ள மக்களுள்ள அனுராதபுரத்திலுள்ள மதவாச்சிய மற்றும் சம்பாவ பிரதேச செயலகத்திலுள்ள 75 கிராம அதிகாரியிலுள்ள 25,000 குடும்பங்களையும் உள்ளடக்குகின்றது. இருப்பினும், நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒக்தோபர் 2022 முதல் இயக்கப்பட்டு ஓ&எம் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் 2024 இல் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 6000 புதிய இணைப்புகளில் 1,881 புதிய இணைப்புகள் மட்டுமே 2024 யூலை 31 ஆன கணக்காய்வு செய்யப்பட்ட திகதிக்குள் வழங்கப்பட்டுள்ளன. | நீர் சுத்திகரிப்பு நிலையம் ஓ&எம் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், வீட்டு இணைப்புத் திட்டம் ஓ&எம் ஆல் கையாளப்படுகிறது. புதிய வீட்டு இணைப்பு முன்னேற்றமானது, மெடவாச்சியா மற்றும் ரம்பேவ டீஎஸ்டிகள் இரண்டிலும் சீபீஓக்களின் கையகப்படுத்துவதைப் பொறுத்தது. இதுவரை, 16 சிபீஓக்கள் கையகப்படுத்தப்பட்டு, 3,002 புதிய இணைப்புகள் கையகப்படுத்தப்பட்ட சிபிஓக்களின் கீழ் வழங்கப்பட்டுள்ளன, மேலும் புதிதாக அமைக்கப்பட்ட குழாய் இணைப்புக்களில் இருந்து 720 புதிய இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. | மேலும் காலதாமதமின்றி பயனாளிகளுக்கு எதிர்பார்த்த பலன்களை வழங்கும் வகையில் வீட்டு இணைப்பு மாற்றும் பணியை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | லொட் ஏ இன் ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட மின்கலங்கள் செயலிழந்ததால் ரூபா 26.81 மில்லியன் பெறுமதியான நான்கு ஜெனரேட்டர்கள் செயலிழந்தன. எவ்வாறாயினும், அந்த | பேட்டரியை மாற்றுமாறு ஒப்பந்ததாரருக்கு பலமுறை தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், கொடுப்பனவின்மை காரணமாக ஒப்பந்ததாரர் பணிக்கு வரவில்லை. | தற்போதுள்ள ஜெனரேட்டர்களில் உள்ள பிரச்னைகளை சரி செய்து, எதிர்பார்த்த |

| | | |
|---|---|---|
| ஜெனரேட்டர்களின் மூன்று வருட உற்பத்தி உத்தரவாதக் காலமும் 2023 ஆம் ஆண்டோடு காலாவதியாகிவிட்டது. அதன்படி, சீசுபீ மின்சாரம் செயலிழந்தால் நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பிற நீரேற்று நிலையங்களை இயக்க முடியாது என்பது மேலும் கவனிக்கப்பட்டது. | தற்போது மீண்டும் கொடுப்பனவு தொடங்கியுள்ளதால், ஒப்பந்ததாரரிடம் பிரச்னை தெரிவிக்கப்பட்டுள்ளது. | பலன்களை பெற உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3 .3 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது 2023 சனவரியிலிருந்து 18 மாதங்கள் காலப்பகுதிக்காக உத்தியோகத்தர்கள் சம்பளங்கள் மற்றும் ஏனைய நிர்வாகச் செலவீனங்களாக ரூபா 16.86 மில்லியன் தொகையை ஏற்படுத்தி இருந்தது. எனினும், அந்தக் காலப்பகுதிக்காக செயற்திட்டத்தின் மொத்தச் செயன்முன்னேற்றம் 0.15 சதவீதமாகவிருந்ததுடன் இது அந்தக் காலப்பகுதியின் போதிலுள்ள பணத்தின் பெறுமதியுடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்களவு மிகவும் குறைவாகவிருந்தது. | பீஎம்யூ அலுவலகமானது என்டபிள்யூஎஸ்டிபீக்குரிய வதிவிடத்திற்கு மீளச்சென்றதுடன் உத்தியோகத்தர்களையும் குறைத்தது. மிகுதி வேலைகளை பூர்த்திசெய்வதற்கும் ஒப்பந்தகாரர்களின் இறுதிச் சிட்டைகளை கையளித்தல் வேலைகளைப் பரீட்சிப்பதற்கும் கையளித்தல் வேலை மற்றும் செயற்திட்டத்தினை மூலதனமாக்கும் வேலைகளுக்கும் தேவையான 04 அதிகுறைந்த உத்தியோகத்தர்களை கொண்டு பீஎம்யூ இப்போது செயற்படுகின்றது. | எதிர்பாராத சூழ்நிலைகளை நிர்வகிக்கவும், திட்டத்தின் முக்கிய நோக்கங்களை அடைய பணிகளை விரைவுபடுத்தவும், தேவையற்ற செலவைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 முதல் தொடங்கப்பட்டிருந்தாலும், திட்டத்தின் கீழ் எந்த பெரிய ஒப்பந்தமும் 2023 திசெம்பர் 31 வரை முழுமையாக முடிக்கப்படவில்லை. இருப்பினும் நிர்வாகம், ஆலோசனை, பராமரிப்பு போன்ற பெரும் தொகையைச் செலுத்தி பீஎம்யூ மூலம் செயற்திட்டம் இழுக்கப்படுகிறது. மேலும் கடன் தவணை (ரூபா 1,309 மில்லியன்), கடப்பாட்டுக்கட்டணங்கள் (ரூபா 45 மில்லியன்), கடன் வட்டி (ரூபா 178 மில்லியன்) போன்ற அரசாங்க செலவினங்கள் பொருளாதாரத்திற்கு கூடுதலாக நன்மைகள் இல்லாமலும் நிலவும் நாள்பட்ட சிறுநீரக நோய்க்கு (சீகேடியூ) செயற்திட்டப் பகுதியில். தீர்வு வழங்காமல் அதிகரிக்கப்படுகின்றன. | பல்வேறு காரணங்களால் செயற்திட்டத்தின் முன்னேற்றம் கணிசமாக தாமதமானது, இருப்பினும், தற்போது நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் ரம்பேவ தளம் 2022 ஒக்டோபர் 1 அன்று அதிகாரப்பூர்வமாக ஓ&எம் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர், ஓ&எம் பிரிவால் தற்போதுள்ள அனைத்து இணைப்புகளுக்கும் உணவளிக்க முடிந்தது. (1642) ரம்பேவாவில் (டபிள்யூரீபீ) புதிய இணைப்புகள் படிப்படியாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. தற்போது வரை மொத்தம் 7,248 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. லொட் பீ ஒப்பந்த பொதி பூர்த்திசெய்யப்பட்டதுடன் லொட் சீ1 மற்றும் லொட் சீ3 ஒப்பந்தகாரர்கள் பிளசிங் மற்றும் தூய்மையாக்கல் அடுத்த மாதத்திற்குள் பூர்த்திசெய்யப்படும் என எதிர்பார்த்து அதனைத் தவிர்ந்து வேலையின் நோக்கெல்லை பூர்த்திசெய்யப்பட்டது. | |

## 3.4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2010 யூலை 26 ஆம் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 2023 ஆம் ஆண்டில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | பொதுவாக, செயற்திட்ட நடவடிக்கைகள் தொடக்கத்தில் இருந்து என்டபிள்யூஎஸ்டிபீ இன் உள்ளக கணக்காய்வு மூலம் கணக்காய்வு செய்யப்படுகின்றன. ஆனால் பீஎம்யூ இன் உள்ளகக் கணக்காய்வு 2023 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வை ஒழுங்காக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |